REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 7உ வெள்ளி (23—9—55) ★ ★ வெளியீடு: புரட்டாசி 8உ சனி (24—9—55) [இதழ் 87

## இரும்புத் தொழிற்சாலை: நான்காவதும் வடக்கிலேயே?

இந்தியாவின் நான்காவது இரும்பு எஃகுத் தொழிற்சாலை, ஒரிசாவில் உள்ள போனைகார் எனும் இடத்தில் அமையும் என்று, மாநில அரசாங்கத்தில் தொழில் ஆலோசகரான டாக்டர் ஹரிபந்து மொஹந்தி தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவின் மூன்றாவது இரும்புத் தொழிற்சாலை மேற்கு வங்கத்தில் உள்ள துர்காபூரில் அமைகிறது என்ற செய்தி வந்தது நினைவிலிருக்கலாம்.

# மாநில புனரமைப்புக் குழு சிபாரிசு: பல மாநிலங்களில் பரபரப்பு!

## 'சம்யுக்த மகாராஷ்டிரம்' கோரி மராட்டியர் போர்க்கொடி!

### பம்பாயை இருமொழி மாநிலமாக ஆக்குவதற்கு எதிர்ப்பு

கோல்ஹாப்பூர், செப். 21—

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளின்படி, பம்பாய் ஒரு இரு மொழி மாநிலமாக அமைக்கப்படும் என்று பத்திரிகைகளில் வந்த செய்தியைக் குறிப்பிட்டுப் பேசுகையில், கோலாப்பூர் மாவட்ட மகாராஷ்டிர ஏகிகரண் சமிதியின் தலைவரான மாதவராவ் பகல் என்பார், பம்பாய் இரு மொழி மாநிலமாக அமைக்கப்படுவதை பம்பாய் மந்திரி சபையில் உள்ள மந்திரிகள், மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த பம்பாய் சட்டசபை உறுப்பினர்கள், மற்றும் மகாராஷ்டிரப் பிரதேசக் காங்கிரஸ் குழுவினர் எதிர்த்துப் போராடுவர் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"பம்பாயைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மகாராஷ்டிர அமைப்பைத் தவிர வேறெதையும், மகாராஷ்டிர மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; இந்த இலட்சியத்தை ஈடேற்றிக்கொள்வதற்காக, நாங்கள் அமைதியுடனும், உறுதியுடனும், ஐக்கியத்துடனும் போராடுவோம்; அத்தகு ஒரு போராட்டத்தை சர்க்காருக்கு எதிரான 'புரட்சி' என்று கூறிவிட முடியாது; மகாராஷ்டிர மக்கள், போராட்டத்தில் அமைதியைக் கடைப்பிடிக்கவே முயற்சிப்பார்கள்; ஆனால், அடக்குமுறையையும், பலாத்காரத்தையும் கையாளாமல் இருக்க வேண்டிய பொறுப்பு சர்க்காரைச் சேர்ந்ததாகும்; எங்கள் போராட்டத்தில் முழு வெற்றி காண்போம் என்ற நம்பிக்கை எங்கட்கு இருக்கிறது,"

—என்றும் மாதவராவ் பகல் குறிப்பிட்டிருக்கிறார்.

## போராட்டத்தை ஒடுக்க!

### பம்பாய் போலீசார் உஷார்!

அகமதாபாத், செப். 21—

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் வெளியானதும் மாநிலத்தில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் பொருட்டு எல்லா போலீசாரும் பம்பாய் சர்க்காரால் 'உஷார்' படுத்தப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

மாநிலங்களின் எதிர்கால அமைப்பு குறித்த மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் இந்த மாத இறுதியில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குழுவினுடைய அறிக்கையின் சில அம்சங்கள் தங்களுக்குப் பிடிக்காமல் போகுமானால், மொழி வழி மாநில அமைப்பில் ஆர்வங்காட்டி வருவோர், ஏதேனும் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் சூழ்நிலையை உருவாக்கிவிடாமல் தடுப்பதற்காக மாநில, மத்திய சர்க்கார்கள் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள விருக்கின்றனராம்!

## 'மைசூரிலிருந்து பெல்லாரியை பிரிக்காதே'

### 'மீண்டும் ஆந்திரத்துடன் இணைக்காதே'

### கன்னடியர் எச்சரிக்கை!

புதுடில்லி, செப். 22—

துங்கபத்திரா அணைக்கட்டு வேலை நடைபெற்று வரும் பகுதி உட்பட பெல்லாரி மாவட்டத்தின் சில முக்கியமான வட்டங்களை மீண்டும் ஆந்திர மாநிலத்துடன் இணைத்துவிடுவது என்று மாநில புனரமைப்புக் குழுவினர் சிபாரிசு செய்திருப்பதாக, ஏற்கனவே வெளிவந்த செய்திகள் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகின்றன என்பதை உணர்ந்த மக்கள் சபையில் உள்ள கர்நாடக உறுப்பினர்கள், கலவரமடைந்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த உறுப்பினர்கள், இந்தச் செய்தி பற்றிய தங்கள் கவலையை உள்நாட்டு மந்திரி பண்டித பந்தைச் சந்தித்துத் தெரிவித்திருக்கின்றனராம்.

குழுவின் சிபாரிசுகள் கிடைக்கும் வரை, மத்திய சர்க்கார் இதுபற்றி எதுவும் சொல்வதற்கில்லை என்று பந்த் பதிலளித்தாராம்.

இந்த உறுப்பினர்கள் பண்டித நேருவைச் சந்தித்து, 'பெல்லாரி மாவட்டத்தை ஆந்திரத்துடன் இணைக்க வேண்டும்,' என்று மாநில புனரமைப்புக் குழு சிபாரிசு செய்தாலுங்கூட, 'மைசூருடன் அது சேர்ந்திருக்கும் பழைய முடிவை மாற்றக்கூடாது,' என்று வற்புறுத்திக் கூறவும் திட்டமிட்டிருக்கின்றனராம்.

★

## 'காங்கிரசிலிருந்து விலகிவிடுவோம்!'

பெல்லாரி, செப். 22—

ஆந்திர மாநிலத்துடன் மீண்டும் பெல்லாரி மாவட்டத்தில் உள்ள பெல்லாரி, ஹோஸ்பெட், சிறுகுப்பா ஆகிய வட்டங்களை இணைப்பது என்று, மாநில புனரமைப்புக் குழு சிபாரிசு செய்யுமானால், தாங்கள் காங்கிரசிலிருந்து விலகிவிட பெல்லாரி மாவட்டக் கன்னட காங்கிரசார் முடிவு செய்திருக்கின்றனராம்.

மூன்று சட்டசபை உறுப்பினர்கள், பிரதமர் நேருவுக்கும், இதர அதிகாரிகளுக்கும், பெல்லாரி விஷயம் மீண்டும் சகிக்கு வருமானால், கர்நாடகம் முழுவதிலும் கொந்தளிப்பு ஏற்படும் என்று எச்சரித்திருக்கின்றனராம்.

★

## 100 பஞ்சாயத்துத் தலைவர்கள் எச்சரிக்கை

"பெல்லாரியை ஆந்திரத்துடன் இணைப்பது என்ற மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளக் கூடாது,"

என்று, 100-க்கும் மேற்பட்ட பஞ்சாயத்து சபைத் தலைவர்கள் மாநாடு ஒன்றில் எச்சரிக்கப்பட்டிருக்கிறதாம்.

## தகுதி பெற்றவர்கள் கிடைக்கவில்லையாம்!

### டாக்டர் கேஸ்கர் கூறுகிறார்

புதுடில்லி, செப். 22—

"அகில இந்திய வானொலிக்கு தேவையான தொழில் நுணுக்கத் தகுதியுடையவர்கள் கிடைப்பது அரிதாயிருப்பதால், குறைவான தகுதியுடையவர்களை வேலைக்கு எடுத்துக்கொண்டு அவர்களைப் பயிற்றுவிப்பது குறித்து சர்க்கார் தீவிரமாகப் பரிசீலித்துவருகின்றனர்,"

என்று, டாக்டர் கேஸ்கர் தெரிவித்திருக்கிறார்.

## ஐ.நா. பாதுகாப்புசபை

### நிரந்தர உறுப்பினராக இந்தியா மறுப்பு?

புதுடில்லி, செப். 22—

"ஐ. நா. பாதுகாப்பு சபையில் இந்தியா ஒரு நிரந்தர உறுப்பினராக இருக்க சம்மதிக்க வேண்டும்,"

என்று, அதிகாரப் பற்றற்ற முறையில் அமெரிக்கா தெரிவித்த யோசனையை, இந்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

1949-ல் சியாங்-கே-ஷேக் வீழ்ந்தது முதல் ஐ. நா.-வில் சீனாவின் பிரதிநிதித்துவம் பற்றிய தகராறை ஒட்டியதாகவே இந்த அமெரிக்க யோசனை இருக்கும் என்று கருதப்படுகிறதாம்.

## புதுவையில் 6,000 குடும்பங்கள் வேலையின்றித் தவிப்பு

### பொருளாதார நிலை சீர்குலைவு

#### கேவல்சிங் தரும் தகவல்

புதுடில்லி, செப். 22—

புதுவை வட்டத்தின் பொருளாதாரம் முழுவதுமாக சீர்குலைந்து கிடப்பதாகப் புதுவை பிரதம நிர்வாக அதிகாரியான கேவல்சிங் திட்டக் குழுவினரிடம் தெரிவித்திருக்கிறார்.

பிரெஞ்சுக்காரர்கள், புதுச்சேரி நகருக்கு மட்டுமே, இருந்த நிதியை எல்லாம் செலவு செய்தனர்; அதன் சுற்றுப்புறங்களை பின்தங்கிய நிலையிலேயே வைத்து விட்டனர்—என்பதையும் கேவல்சிங் விளக்கிக் கூறினாராம்.

"தங்களுடைய பொருளாதார நிலை வெகுவாக முன்னேற்றப் படும் என்ற நம்பிக்கையிலேயே புதுவை மக்கள், இந்தியாவுடன் புதுவைஇணைவதில் உற்சாகம் காட்டிவந்தனர்; ஆனால், இப்போது மக்கள் மிகவும் வருத்தப்படுகின்றனர்; தங்களின் உற்பத்திக்கு பிரெஞ்சு மார்க்கெட்டை நம்பியிருந்த பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான ஆலைகள் தொடர்ந்து வேலை செய்யாது போகவே, சுமார் 10,000 குடும்பங்கள் வேலை இழந்தன; இதனால், இப்போது பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டுள்ளது; வேலையின்றித்தவிப்போரில் ஒரு பகுதியினர், வேறு வேறு இடங்களில் வேலை பெற்றிருக்கின்றனர் என்றாலும், இன்னும் சுமார், 6,000 குடும்பங்கள் வேலை இல்லாது தவித்துக்கொண்டிருக்கின்றன."

என்று, கேவல்சிங் திட்டக் குழுவினரிடம் எடுத்துரைத்தாராம்.

புதுவைக்கான ரூ 91 கோடி பெறுமான ஐந்தாண்டுத் திட்டம் பற்றி, திட்டக் குழுவினரிடம் விவாதிப்பதற்காக, புதுவை நிர்வாக அதிகாரியான கேவல் சிங்குடன் இரண்டு நகர சபை உறுப்பினர்களும் சென்றிருக்கின்றனர்.

அத்திட்டம் பற்றிய விவாதத்தின் போதுதான் கேவல் சிங் மேற்கண்டவாறு குறிப்பிட்டாராம்.

## பிரதமர் புல்கானின்

புதுடில்லி, செப். 22—

சோவியத் பிரதமர் புல்கானின் தமது சகாக்களிலருடன், வரும் நவம்பர் மத்தியில் இந்தியா வரக்கூடும் என்று தெரிகிறது.

## நெசவு ஆலைகள்

### 'மானேஜிங் ஏஜென்சி' முறை ஒழிக்கப்படுமாம்!

புதுடில்லி, செப் 22—

"நெசவு ஆலைகளைப் பொறுத்த மட்டில், 1960-ம் ஆண்டுக்குப் பின், இந்திய சர்க்கார் 'மானேஜிங் ஏஜென்சி' முறையை ஒழிப்பர்,"

என்று, நிதி மந்திரி தேஷ்முக் சூசகமாகத் தெரிவித்திருக்கிறார்.

## வெளி நாட்டவரிடம் பத்திரிகைகள்

"இந்தியாவிலுள்ள வெளிநாட்டவர்களிடம் செய்தித் தாள்கள், சஞ்சிகைகள் இவை சொந்தமாயிருக்கக் கூடாது,"

என்ற, 'பத்திரிகைக் குழு செய்த சிபாரிசை, இந்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டுவிட்டதாகத் தெரிகிறது.

## சேரி ஒழிப்புக்கு மானியம்கிடையாதாம்

### கடன்தான் தருகிறார்களாம்!

புதுடில்லி, செப். 22—

"முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், நகர்ப் புறங்களிலும், கிராமப் புறங்களிலும் குடிதண்ணீர் வசதி செய்யவும், பாதாள சாக்கடை அமைக்கவுமான மாநில சர்க்கார்களின் திட்டங்களுக்கு இந்திய சர்க்கார் ரூ. 18,72,00,000 உதவுவதற்குச் சம்மதித்திருக்கின்றனர்,"

என்று, உதவி சுகாதார மந்திரி மரகதம் சந்திரசேகரன் தெரிவித்திருக்கிறார்.

சேரிகள் ஒழிப்புக்காக இந்திய சர்க்கார் கடன்தான் வழங்கிற்றே தவிர, மானியங்கள் வழங்கவில்லை,"

என்றும் அவர் தெரிவித்தார்.

## உயர்த்தப்படுகிறது!

புதுடில்லி, செப். 22—

டாக்டர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெறும் வயது 60 என உயர்த்தப்படும்,"

என்று மக்கள் சபையில் உதவி சுகாதார மந்திரி மரகதம் சந்திரசேகரன் தெரிவித்திருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 23—9—'55 வெள்ளி

# இரு முரண்பாடுகள்!

சுமார் அறுபது கோடி மக்களைக் கொண்ட செஞ்சீன சர்க்கார்தான் சீன நாட்டின் உண்மையான பிரதிநிதியாகும்; ஆகவே, அந்த சர்க்காருக்கு ஐ. நா. சபையில் இடம் இருக்க வேண்டும்; சீனாவின் பெயரினால், எங்கோ ஒரு தீவில் தஞ்சம் புகுந்துள்ள சியாங்-கே-ஷேக் கும்பலுக்கு ஐ. நா.-வில் இருக்கும் பிரதிநிதித்துவம், நியாயமாக, செஞ்சீன சர்க்காருக்குத் தரப்பட வேண்டிய ஒன்றாகும்.

சீனா சிவப்பேறியது, 1949 அக்டோபரில்; 1950-ம் ஆண்டு நடைபெற்ற ஐ. நா. சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில், அப்போது இந்தியப் பிரதிநிதியாயிருந்த காலஞ்சென்ற பி. என். ராவ் அவர்கள், 'செஞ்சீனாவிற்கு ஐ நா.-வில் இடம்தர வேண்டும்,' என்று தீர்மானம் கொண்டுவந்தார்; அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளும், அவற்றின் சார்பு நாடுகளும் தீர்மானத்தை எதிர்த்து முறியடித்துவிட்டன.

அதிலிருந்து, தொடர்ந்து, ஐ. நா. சபையில் உள்ள ரஷ்யப் பிரதிநிதி, ஆண்டுதோறும் சபைக் கூட்டம் துவங்கும் போது, செஞ்சீனாவுக்கு ஐ. நா.-வில் இடம் பற்றிய தீர்மானத்தைக் கொண்டுவருவதும், 'அந்தச் சிக்கலை சபை இப்போது விவாதிக்கக் கூடாது—ஒத்திவைக்கவேண்டும்,' என்று அமெரிக்கா முதலிய நாடுகள் தங்கள் பெரும்பான்மை பலத்தால் கோருவதும், ரஷ்ய முயற்சி தோல்வியுறுவதும் வழக்கமாக நடைபெற்று வருகின்றன.

'ஐ. நா. சபையின் பேரறிக்கை விதிக்கிற விதிகளுக்கும், சர்வதேசச் சட்டங்களுக்கும் உட்பட்ட ஆட்சிதான் பீகிங் நகரில் இருப்பது' என்பதை, நாணயமான அரசியல்வாதிகள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். செஞ்சீன சர்க்காரும், தங்களுக்கு, ஐ. நா.-வில் இடம் தரப்படுமானால், ஐ. நா.-வின் முடிவுகளை சட்ட ரீதியானவை என்று ஏற்றுக்கொண்டு, அந்த முடிவுகளுக்கு உட்பட்டு நடக்கச் சித்தமாயிருப்பதாகப் பலமுறை அறிவித்து வந்திருக்கின்றனர்.

'சீனா சிவப்பேறியிருக்கிறது,' என்ற காரணத்தினாலேயே, 'ஐ. நா.-வில் இடம் பெறக்கூடாது,' என்று எவரேனும் கருதுவரானால், அவர்கள், ஐ. நா. தோற்றுவிக்கப்பட்ட நோக்கத்தின் அடிப்படையையே உணர்ந்து கொள்ளாதவர்களாகத்தான் இருக்கமுடியும்.

என்றைக்கு ஐ. நா. சபை உலகத்தில் உள்ள எல்லா நாடுகளினுடையவும் பிரதிநிதித்துவத்தைப் பெற்ற ஒன்றாக உருவாகிறதோ, அன்றுதான் அது — எந்தத் தேவைக்காக அச்சபை அமைக்கப்பட்டதோ அந்தத் தேவையைச் செயல்படுத்தும் முழு அதிகாரமும், ஆற்றலும் படைத்த ஒன்றாகத் திகழ முடியும்.

இந்த அடிப்படையில்தான், நேர்மையாளர் பலரும், செஞ்சீனாவிற்கு ஐ. நா.-வில் இடம் கோருகின்றனர். இந்த ஆண்டு ஐ. நா. சபைக் கூட்டத் துவக்கத்தில், ரஷ்யப் பிரதிநிதி இது குறித்துக் கொண்டுவந்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து, அமெரிக்கா கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஐ. நா. சபை ஏற்றுக்கொண்டிருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

உலக சூழ்நிலைகளில் புதுத் திருப்பங்கள் நிகழ்ந்துள்ளன; ஜினீவாவில் அண்மையில்கூடிய நால்வர்மாநாடு, உலகநெருக்கடியைப் பெரும் அளவு தணித்து சமாதானம் நிலவ வழி கோலியுள்ளது என்றெல்லாம் கூறப்படுகிறது; ஆனாலும், வர்ணிக்கப்படுகிற நல்ல சூழ்நிலையில் கூடிய ஐ. நா. சபையில், வருந்தத் தக்க முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பது வியப்பளிக்கிறது.

'ஐ. நா.-வில் சீனாவிற்கு இடம் இருக்கிறது; ஆனால், யார் சீன நாட்டின் சார்பில் அந்த இடத்தில் அமருவது? செஞ்சீனாவா, சியாங்கும் பலா — என்பதுதான் சிக்கலான பிரச்சினையாக இருக்கிறது' என்று, இந்தியப் பிரதிநிதி குறிப்பிட்டிருக்கிறார், அங்கு!

'அறுபது கோடி மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பீகிங் சர்க்கார்தான் சீன நாட்டின் பிரதிநிதி,' என்பதில், என்ன சந்தேகம் தோன்ற முடியும்?

அமெரிக்கா, செஞ்சீன சர்க்காரை அங்கீகரிக்கவில்லை என்பதினாலேயே, 'அங்கு உள்ளது சர்க்காரே இல்லை' என்று பொருளா?

இப்படி, தான் அங்கீகாரம் செய்யாத ஒரு சர்க்காரின் பிரதிநிதியோடு, எப்படி அமெரிக்கா தன் பிரதிநிதி ஒருவரை கடந்த ஆகஸ்டுத் திங்கள் ஜினீவாவில் சந்தித்து, நாற்பது நாட்கள் பேச்சுவார்த்தை நடத்த அனுமதித்தது? அந்தந்த நாட்டுக் குடி மக்களை, அவரவர் நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதற்காக என்று கூறி, தன் நாட்டுப் பிரதிநிதியை—தான் அங்கீகாரம் செய்யாத ஒரு நாட்டு ஆட்சியின் பிரதிநிதியோடு பேச்சுவார்த்தை நடத்திய அமெரிக்கா, 'தன் காரியம் என்றால் மட்டும் ஒரு ஆட்சியை அங்கீகரிப்பது—பிறர் காரியம் என்றால், அங்கீகாரம் இல்லை,' என்று பொருள்படும் முரண்பாடான நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுவது, முழுவதும் தவறுடையது அல்ல!

ஜினீவாவில் அமெரிக்கா, செஞ்சீனப் பிரதிநிதியுடன் பேசியது, 'அப்படி ஒரு சர்க்கார் பீகிங்கில் இருக்கிறது,' என்ற உண்மையை மானசீகமாக ஏற்றுக்கொள்வதாகத் தானே பொருள்படும்? அப்படி, தான் ஏற்றுக் கொண்ட ஒரு சர்க்கார், ஐ. நா.-வில் இடம் பெறும் பிரச்சினையின் போது மட்டும், தன்னால் அங்கீகாரம் பெறாத சர்க்காராகக் கூறப்படுவது முரண்பாடல்லவா?

அதுபோலவே, பாண்டுங் மாநாட்டு முடிவில் வெளியிட்ட அறிக்கையில், 'உலக நாடுகள் எல்லாவற்றிற்கும் ஐ. நா.-வில் இடம் வேண்டும்,' என்று கோரினர். அந்த மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகளான எத்தோப்பியா, ஈரான், ஈராக், பிலிப்பைன்ஸ், துருக்கி, பாகிஸ்தான் ஆகிய நாடுகள், 'செஞ்சீனாவிற்கு ஐ. நா.-வில் இடம் தரும் விஷயத்தை ஓராண்டுக்கு ஒத்திவைக்க வேண்டும்,' என்று, ஐ. நா. சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்துள்ளன; ஆப்கனிஸ்தான், எகிப்து, சவூதி அரேபியா, சிரியா, யேமன் ஆகிய பாண்டுங் மாநாட்டு நாடுகள் நடுநிலைமை வகித்துள்ளன.

இந்த நாடுகள் எல்லாம், 'சீன மக்களின் பிரதிநிதி பீகிங் சர்க்கார்தான்,' என்று பாண்டுங்கில் ஏற்றுக்கொண்டு, சௌ-என்-லாயுடன் கூடிப் பேசின; கூட்டறிக்கை வெளியிட்டன; ஆனால், அதே செஞ்சீனா ஐ. நா.-வில் இடம் பெறும் பிரச்சினை வரும்போது அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு, 'செஞ்சீனா இடம் பெறக்கூடாது,' என்கின்றன. 'பாண்டுங்கில் செஞ்சீனத்தை அங்கீகரிப்பதும், ஐ. நா.-வில் அங்கீகரிக்க மறுப்பதும் முரண்பட்ட போக்கு அல்லவா?'—என்ற கேள்வி நியாயமாக எழுகிறது.

அமெரிக்காவும், பாண்டுங் மாநாட்டு நாடுகளிடம் மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஊடுருவிநிற்கும் முரண்பாடுகள், 'நிலைநாட்டப்பட்ட ஒரு உண்மையை நெடு நாளைக்குப் புறக்கணிக்க உதவாது,' என்றே, 'உண்மை விரும்பிகள்' நம்புகின்றனர்.

## சென்னையில் காகித ஆலை!

### ரூ. 3.12 கோடி செலவில் அமையும்?

சென்னை—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், சென்னை சர்க்கார் துவக்குவதாயுள்ள காகித ஆலையில் எழுதவும், அச்சிடவும் உபயோகப்படக் கூடிய காகிதங்கள் தயாராகுமென்றும், தினம் ஒன்றுக்கு 50 டன் உற்பத்தி செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது.

தற்போது சென்னை மாநிலத்தில் காகித ஆலை ஏதும் இல்லை; ஆண்டுதோறும் சர்க்கார் 4,000 முதல் 5,000 டன் வரை காகிதம் உபயோகிக்கின்றனர்; இவை வெளியிலிருந்துதான் வாங்கிக் கொள்ளப்படுகின்றன; தண்ணீர், மின்சாரம் இவை கிடைப்பதையொட்டி, தொழிற்சாலை நீலகிரி அடிவாரத்தில் துவக்கப்படலாம் என்றும், இதற்கான திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 3·12 கோடி என்றும் கூறப்படுகிறது.

## சூடானுக்கு வைத்திய அதிகாரிகள் தேவையாம்!

### இந்திய சர்க்கார் மூலம் திரட்டப்படுகின்றனர்

சூடான் சர்க்கார், அநேக வைத்தியத் துறைப் பதவிகளுக்கு இந்திய சர்க்கார் மூலம் ஆள் திரட்டி நியமனம் செய்கிறார்கள்; தகுந்த யோக்கியதாம்சம் உள்ள இந்தியர்கள் டாக்டர்களாகவும், நிபுணர்களாகவும், சிப்பந்திகளாகவும் தேவைப்படுகிறார்களாம்.

## 'தென் மாநிலம்' அமைப்புக் கோரிக்கை

### 'மக்கள் ஆதரவு அற்றது; தவறானது'

கேரளத் தலைவர்கள் கூட்டறிக்கை

புதுடில்லி, செப். 21—

"திரு—கொச்சி, கூர்ஜரம் ஆகியவற்றை சென்னை மாநிலத்துடன் இணைத்து, ஒரு 'தென் மாநிலம்' அமைக்கும் யோசனை செயலாற்ற முடியாதது; மக்கள் ஆதரவு அற்றது; தவறானது"—என்று, மூன்று கேரளீயர்கள் ஒரு 'கூட்டறிக்கையில் தெரிவித்திருக்கின்றனர்.

சென்னை முன்னாள் மந்திரி மாதவ மேனன் எம். பி, கே. ஏ. தாமோதரமேனன் எம். பி, (ஐக்கிய கேரளக் குழு செயலாளர்) டாக்டர் பி. ஜே தாமஸ் (ஐக்கிய கேரளக் குழு உறுப்பினர்) ஆகிய மூவரும் வெளியிட்டுள்ள அந்த அறிக்கை கூறுவதாவது:—

"தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள், ஒரு 'தமிழ் மாநிலம்' கோருகின்றன; அதேபோல, திரு-கொச்சி அரசியல் கட்சிகள், 'கேரள மாநிலம்' கோரிவருகின்றன; கூர்ஜரம், தான் ஒரு தனி மாநிலமாக இருக்க முடியாது போனால், எதிர்காலக் கர்நாடக மாநிலத்தின் ஒரு பகுதியாக இருக்கப்போவதாக அறிவித்துவிட்டிருக்கிறது;

"ஒரு 'தென் மாநிலம்' அமைப்பதை, சென்னை முதன் மந்திரி காமராசர் ஆதரிக்கவில்லை; திரு-கொச்சி முதன் மந்திரி பனம் பள்ளிகோவிந்த மேனன், தான் அந்த யோசனையை எதிர்ப்பதாகத் தெரிவித்திருக்கிறார்;

"உத்தேசிக்கப்படுகிற தென் மாநிலத்தில் தமிழ் மக்கள்தான் பெருவாரியாக இருப்பர்; அவர்கள் இந்தத்திட்டத்தை வரவேற்காவிட்டால், 'தென் மாநிலத்'தைப் பற்றிப் பேசுவது, அர்த்தமில்லாததாகும்;

"மலபாரில் தான் தென் மாநில அமைப்பிற்கு சிறிது ஆதரவு இருக்கிறது;

"மலபார் பிரதேசக் காங்கிரஸ் செயற்குழு, அண்மையில் இந்தக் கோரிக்கையை ஆதரித்திருக்கிறது.

"மலபார் மாவட்ட மக்கள், சென்னை சர்க்கார் தங்களை நடத்தும் போக்கு கண்டு வருந்தி வருவதுடன், தனி கேரள மாநிலம் அமைவதற்கான ஏற்பாட்டினை வரவேற்றிருக்கின்றனர்;

"விவாதத்திற்காக, மலபார் மக்கள் அனைவரும் 'தென் மாநில அமைப்பை' வரவேற்பதாக வைத்துக்கொண்டாலும், அவர்கள் சிறுபான்மையினர் என்பதால், அவர்கள் கருத்துக்குப் பெரும்பான்மையினர் அடிபணியுமாறு மாநில புனரமைப்புக் குழுவோ, இந்திய சர்க்காரோ வற்புறுத்த முடியாது;

"எனவே, கேரள மக்கள், மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளுக்காகக் காத்திருந்து, குழுவின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு நடந்துகொள்ள முற்பட வேண்டும்."

## தொழில் துறைத் தகராறுகள்

### வழக்குகளில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் எண்ணிக்கை

புதுடில்லி, செப். 22—

இந்தியாவில், 1955 ஜூன் மாதத்தில், புதிதாக மொத்தம் 114 தொழில் துறைத் தகராறுகள் ஏற்பட்டன; இவற்றில் 104 - தகராறுகளில் மொத்தம் 74,407 - தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

இந்த மாதத்தில் நீடித்துவந்த தகராறுகளின் எண்ணிக்கை 145; இவற்றில் 132 தகராறுகளில் மொத்தம் 79,766 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

17 தகராறுகளில், தொழிலாளர்கள், முழுதுமோ அல்லது ஓரளவோ வெற்றியடைந்தனர்; 15 தகராறுகளில் அவர்கள் வெற்றி பெறவில்லை; 73 தகராறுகளில் முடிவு நிச்சயமில்லாமலும், 3 தகராறுகளில் முடிவு தெரியாமலும் இருந்தது.

இம்மாதம் புதிதாக ஏற்பட்ட 12 தகராறுகள் 'கூலி, படித் தொகைகள்' பற்றியதாகவும், 14 தகராறுகள் 'சிப்பந்திகளின் குறைகள்' பற்றியதாகவும், 12 தகராறுகள் 'ஆட்குறைப்பு' பற்றியதாகவும், 64 தகராறுகள் 'இதர காரணங்கள்' பற்றியதாகவும் இருந்தன.

14 மாநிலங்களிடமிருந்து கிடைத்துள்ள தகவல்களின்படி, அந்த மாநிலங்களின் தொழிலாளர் நல இலாகாக்களுக்கு மொத்தம் 1,914 புகார்கள் கிடைத்தன என்றும், அவற்றில் 1,627 புகார்கள் சம்பந்தமாக தீர்த்து வைக்கப்பட்டோ, விசாரிக்கப்பட்டோ முடிவு செய்யப்பட்டன என்றும் தெரியவருகிறது.

## இந்திய உருக்கு ஆலைக்கு சோவியத் இயந்திரங்கள்

ரஷ்யாவின் ஒத்துழைப்புடன் இந்தியாவில் நிறுவப்படும் உருக்குத் தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்களை விநியோகம் செய்ய லெனின்கிராடி லுள்ள நிறுவனமொன்றுக்கு இந்திய சர்க்கார் 'ஆர்டர்' கொடுத்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

## மக்கள் சபையில் கேள்வி நேரம்

★

### இந்தியாவில் உள்ள அமெரிக்கக் குடிமக்கள்

"வியாபாரத் துறையில் தற்போது இந்தியாவில் ஈடுபட்டுள்ள அமெரிக்கக் குடி மக்களின் எண்ணிக்கை மொத்தம் 302 பேர்; படிப்புக்காகவும், மதப் பிரசார வேலைகளுக்காகவும், இந்தியாவில் இருந்துவரும் அமெரிக்கக் குடி மக்களின் எண்ணிக்கை முறையே 207; 1,579 ஆகும்," என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1,32,999 பேர்கள் விண்ணப்பித்தனராம்!

1954—55-ம் ஆண்டில், மொத்தம் 1,32,999 பேர், ஜம்மு—காஷ்மீர் மாநிலத்தில் நுழைவதற்காக அனுமதி கோரி விண்ணப்பித்துக் கொண்டனராம்.

### எவ்வளவு தெரியுமா?

இந்திய—அமெரிக்க தொழில் நுட்ப ஒத்துழைப்பு ஏற்பாட்டின் கீழ், 1851—52-ம் ஆண்டிலிருந்து 1954—55-ம் ஆண்டு வரையுள்ள காலத்தில், அமெரிக்கா அனுமதித்துள்ள நிதி உதவி மொத்தம் சுமார் 244 மில்லியன் டாலர்களாம்—அதாவது சுமார் ரூ. 116 கோடியாம்!

### பாக்கு இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளது?

பாக்கு இறக்குமதிகளின் மீது விதிக்கப்பட்டுவரும் வரி ஏப்ரல் 30-ந் தேதியிலிருந்து குறைக்கப்பட்டிருக்கிறதாம்; மொத்தம் ரூ. 6,50,00,000 வருமானம் கிடைக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

### நிக்கல் நாணயங்களுக்குக் கச்சா உலோகம்

நிக்கல் நாணயங்கள் செய்வதற்காக 1947-லிருந்து 1952 வரை சுமார் ரூ. 3,74,00,000 பெறுமானமுள்ள 4460 55 டன் சுத்தமான உலோகத்தை இந்திய சர்க்கார் வாங்கினராம்.

# ஆறு ஆண்டுகளில் கழகம் எப்படி வளர்ந்தது?

## கோவில்பட்டியில் மனோகரன்

"ஆறு ஆண்டுகளுக்கு முன்பாகத் திராவிட இயக்க அரசியல் வானில் ஏற்பட்ட கொந்தளிப்புக்குப் பரிகாரம் தேடும் வகையில் துவக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், 'இருக்குமோ, இறக்குமோ?'—என்று ஆரூடம் கணித்தவர்கள் ஏராளம், ஏராளம்! தொல்லைகள்—துயர் தரும் சங்கடங்களெல்லாம் மின்னி மறைந்து இன்று திராவிட முன்னேற்றக் கழகம் ஏழாம் ஆண்டின் உதய வாயிலில் நிற்கிறது. துயர மேகங்கள்—சுயநலமிகளின் சொக்கட்டான் ஆட்டம்—இச்சகம் பேசி ஈட்டி வீசுவோர்—இறுமாப்பால் இழித்துப் பேசுவோர் அனைவரையும் துச்சமெனத்தள்ளி, துணிவு ஒன்றையே துணையாகக் கொண்டு துவக்கப்பட்ட தி. மு. கழகம், இன்று தென்னாட்டில் மாபெரும் மக்கள் சக்தியாக விளங்குகிறது.

"சுமார் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, திராவிட இயக்கக் கொள்கைகளை விளக்கிப் பேசிய காலத்தில் கொடுக்கப்பட்ட கல்லடியும், சொல்லடியும் மங்கி மறைந்து, இன்று தி. மு. கழகம் இளைஞர் தம் உள்ளத்தே தவழ்ந்து மகிழ்கிறது! இந்த அபரிதமான வளர்ச்சி எங்ஙனம் ஏற்பட்டது? அடி, உதை, குத்து, வெட்டு ஆகிய இரத்தத் தடாகத்தை நீந்தி வந்திருக்கும் தி. மு. கழகத்திற்கு மிகக் குறுகிய காலத்தில் மிகப் பெரிய செல்வாக்கு ஏற்படுவானேன்?

"தி. மு. கழகம் துவங்கப்பட்ட **1949**-ம் ஆண்டிற்கு முன்னர், 'மக்கள் இருக்க வேண்டிய கட்சி—காங்கிரஸ் கட்சி ஒன்றே' என்ற நிலைமாறி, ஆறு வயது மட்டுமே நிரம்பியிருக்கும் நமது கழகத்திற்கு மக்கள் அணி அணியாகத் திரண்டு வருவானேன்? 'விடுதலை விரும்பிகள்' நிரம்பிய காங்கிரஸ், வரவர மக்களது தொடர்பைத் துண்டித்துவிட்டதுதான் இதற்குக் காரணம்; இந்த அடிப்படை உண்மையை காங்கிரஸ் அன்பர்கள் அனைவரும் உணரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"'நேருவுக்குப் பின்னர் இந்தியாவின் கதி என்னவோ?'—என்று காங்கிரஸ் வட்டாரங்களிலேயே பேசப்படுகிறது. பிரச்சினைகளைச் சமாளிக்கும் அத்தகைய பண்பும், ஆற்றலும் மிக்கவர் நேரு என்றால், அவரது காலத்திலேயே நமது பிரச்சினைகளுக்கு முடிவு தெரிந்தாக வேண்டுவதுதானே அறிவுடைமை? எனவே, மதிப்பு மிக்கக் காங்கிரஸ் அன்பர்கள், அண்மையில் சென்னைக்கு வருகை தருகிற பண்டித நேரு அவர்களைச் சந்தித்து, திராவிட இயக்கத்தின் கொள்கை, கோட்பாடுகளைத் தெளிவாக எடுத்துச் சொல்லி, தென்னாட்டில் தி. மு. கழகத்திற்கு இருக்கும் செல்வாக்கை ஒளிக்காமல்—மறைக்காமல் எடுத்துக்காட்டி, தாங்களாகவே திராவிட நாடு பிரிவினை பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும்."

*—இவ்வாறு தோழர் நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள், 20—9—55 இரவு 7 மணியளவில் கோவில்பட்டியில் அழகிரி சதுக்கத்தில் நடைபெற்ற தி. மு. கழக 7-வது ஆண்டு விழா, திராவிட நாடு பிரிவினை நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.*

தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:—

"ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைக்கும் நேரு—'மாதிரி சோஷலிஸ'த்தையாவது நம்ப வேண்டும் என்ற அளவிற்கு இருக்கும் நேரு, நமது திராவிட நாட்டுப் பிரச்சினையை மட்டும் நம்ப மறுப்பதேன்?—வரலாறு தரும் உண்மைகளை உணர்ந்துள்ள நேரு, நமது பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடிவிட்டல்லவா உலக நாடுகளில் பவனி வரவேண்டும்? நாம் தரும் வரலாற்று உண்மைகளை மறந்து—மறுத்து, நமது பிரச்சினைகளை அவர் ஒதுக்கித் தள்ளுவானேன்?"

இவ்வாறு பேசின தோழர் மனோகரன், மேலும், விவசாய நாடாகவே ஆக்கிவைக்கப்பட்டிருக்கும் திராவிடத்தை நல்ல தொழில் நாடாக மாற்றி வாழவழிதேடும்படி கேட்டுக்கொண்டும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஓரவஞ்சனை, ஊழல் பற்றியும் பேசினார்.

### நிகழ்ச்சிகள்

20—9—55 மாலை 7 மணிக்கு, கோவில்பட்டி அழகிரி சதுக்கத்தில் தோழர் கே. சுப்பிரமணியம் தலைமையில் தி. மு. கழக 7-வது ஆண்டுவிழா, திராவிட நாடு பிரிவினை நாள் விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் மு அருணாசலம், டபிள்யூ டி துரைசாமி, ஆர். பி. சன்யாட்சன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இறுதியில் தோழர் நாஞ்சில் கி மனோகரன் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

கோவில்பட்டி நகர தி. மு. கழகம், இலுப்பையூரணி தி. மு. கழகம், இலட்சுமி ஆலை தி. மு கழகத் தோழர்கள், சாக்குத் தையல் தொழிலாளர்கள், ரைஸ் மில் தொழிலாளர்கள் ஆகியோர் சார்பில் தோழர் மனோகரன் அவர்கட்கும் இலுப்பையூரணி தி. மு. கழகச் சார்பில் தோழர் டபிள்யூ. டி துரைசாமிக்கும், கோவில்பட்டி நகர தி. மு. கழகச் சார்பில் தோழர் ஆர். பி. சன்யாட்சன் அவர்கட்கும், தோழர் துரைசாமி சார்பில் தலைவர் தோழர் சுப்பிரமணியத்திற்கும் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

# விஞ்ஞானம் வளருகிறது!

## வெய்யிலின் சக்தியால் டெலிபோன் இயங்குமாம்!

வெய்யிலிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சார சக்தியை, டெலிபோன் இயங்குவதற்கு முதன் முதலாகப் பயன்படுத்த அமெரிக்காவில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாம்.

டெலிபோன் கம்பமொன்றில் 33 அங்குல நீளமும், 26 அங்குல அகலமும், சுமார் 1 அடி உயரமும் உள்ள அலுமினியப் பெட்டி வைக்கப்படும்; அதனுள்ளே இருக்கும் உலோகப் பொருட்கள், சூரியக் கிரகணங்களிலிருந்து மின்சார சக்தியை உற்பத்தி செய்து வினியோகிக்கும்; இத்தகைய மின்சார சக்தியைக் கொண்டு 8 டெலிபோன்களை இயக்கச் செய்யலாம்.

மழை, மேகம் நிறைந்த எந்த நாட்களிலும் இவ்வாறு மின்சார சக்தி உற்பத்தி செய்ய முடியும். தேவைக்கு அதிகமான மின்சார சக்தி இரவு நேரத்தில் பயன்படுவதற்காக சேமிப்பு பாட்டரிக்குள் செலுத்தப்படும்.

இவ்வாறு கிடைக்கும் மின்சார சக்தியின் அளவு மிகக் குறைவுதான்; எனினும், அது நிலக்கரி அல்லது எண்ணெயிலிருந்து கிடைக்கும் மின்சார சக்தியைப் போன்றதாகும். 10 கிலோவாட் மின்சார சக்தியை இதன் மூலம் எப்பொழுதுமே உற்பத்தி செய்ய முடியும்.

இத்தகைய 'சூரிய வெப்ப மின்சார பாட்டரி'களை கிராமப் பகுதிகளில் இயங்கும் போன்களுக்கு உபயோகிக்கலாமாம்!

## செவ்வாய் மண்டலத்தில் பசுமைப் பிரதேசம்!

### 2 இலட்சம் சதுரமைல் பரப்பளவில் இருக்கிறதாம்!

வாஷிங்டன், செப். 19—

செவ்வாய் மண்டலத்தில், புதிய தாவர வர்க்கங்கள் தென்படுகின்றனவாம்; சுமார் 2 லட்சம் சதுரமைல் பரப்பளவுக்குப் பசுமைப் பிரதேசம் இருப்பதாகப் புதிதாக எடுக்கப்பட்டுள்ள புகைப்படங்களிலிருந்து தெரிகிறதாம்; தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தக் கோணம் புகைப்படமெடுக்கப்பட்டதாம்.

# பிரிவினை முழக்கம்

★

**திருக்களாச்சேரி**
அழகிரி சதுக்கத்தில்
25—9—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: வீ. மாரிமுத்து
பேசுவோர்:
தில்லை வில்லாளன்
சி. ஜம்பு

★

**புதுவை**
ஒதியஞ்சாலைத் திடலில்
**25—9—55** மாலை 6½ மணிக்கு
தலைவர்: ச. சிவப்பிரகாசம்
பேசுவோர்:
எம். எஸ். இராமசாமி
வாணிதாசன்
சே. கோவிந்தராசன்

★

**வேலப்பாடி**
25—9—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: இளஞ்செழியன்
பேசுவோர்:
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி
ரஷீர்
வே. சு. பாண்டியன்

★

**பரமக்குடி**
குமரன் படித்துறையில்
26—9—55 இரவு 9 மணிக்கு
தலைவர்: எம். ஏ. வகாப்
பேசுவோர்:
இரா. சு. தங்கப்பழம்
ஆர். எஸ். பிரகாசம்
எஸ். நித்தியானந்தம்
நாகலிங்கம்

★

**திருத்தங்கல்**

25—9—55 இரவு 10 மணிக்கு, பாண்டியன் பூங்காவில் அமைத்திருக்கும் அழகிரி அரங்கில், தோழர் கு ஆ சின்னக்கனி தலைமையில், 'தூக்கு மேடை'—நாடகம் நடைபெறும்.

★

**முதலியார்பேட்டை (புதுவை)**

25—9—55 காலை 9 மணிக்கு, கழகப் பணிமனையில் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கலும், 10 மணிக்குச் சாராமணிக்குப்பத்தில் கொடியேற்று விழாவும் நடைபெறும் பகல் 12 மணிக்கு ஏழைகளுக்குக் கழகத்தில் உணவளிக்கப்படும் மாலை 4 மணிக்கு, தோழர் பி. குப்புசாமி தலைமையில் திராவிட நாடு பிரிவினையின் அவசியம் பற்றி தோழர்கள் இரா. இராமச்சந்திரன், கோ. சுப்பிரமணியன், மு. வெங்கடேசன் ஆகியோர் பேசுவர்.

★

**கே. எஸ். பாண்டியன் படிப்பகம்**
**திருவல்லிக்கேணி**

25—9—55 மாலை 6 மணிக்கு, எண் 1/2. சிவராமன் தெருவில் (மேற்படி படிப்பகத்தில்), தோழர் கா. அப்பாதுரை தலைமையில் நடைபெறும். தோழர்கள் இளம்பரிதி, மா. பா. சாரதி, கபிலன், எம் கே. மணி, தாமோதரன், நெடுமாறன் ஆகியோர் பேசுவர்.

# முதல் திட்ட மதிப்பீட்டுச் செலவு

## ரூ. 281 கோடி குறைகிறது

புதுடில்லி, செப். 21—

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிற தொகை ரூ. 2,050 கோடி என்றும், இது ஏற்கனவே திட்டமிடப்பட்ட தொகையைவிட ரூ. 281 கோடி குறைவானது என்றும், உதவி திட்ட மந்திரி எஸ் என். மிஸ்ரா மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"செலவு குறைந்ததற்கு, சில திட்டங்கள்—தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள் போன்றவை—இரண்டாம், மூன்றும் ஆண்டுகளில்தான் முடிவு செய்யப்பட்டன என்பதும், பின்தங்கிய மாநிலங்களில் தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்றவர்கள் தயாரிக்கப்படவேண்டியிருந்தனர் என்பதும், பெரும் தொழில்களைத் துவங்குவதற்கான துவக்கக் கால விசாரணை முதலியனவற்றிற்கு நிபுணர்களின் உதவியைப் பெற குறிப்பிட்டிருந்த காலத்தைக் காட்டிலும் அதிகமான காலமாகிவிட்டது என்பதும் காரணங்களாகும்," என்றும் உதவி மந்திரி தெரிவித்திருக்கிறார்.

# ஐதராபாத்தின் 2-ம் திட்ட மதிப்பு...

## ரூ. 154 கோடியாம்!

ஐதராபாத், செப். 21—

'ஐதராபாத் மாநிலத்தின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட மதிப்பு ரூ. 105 கோடி என நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது,' என்று, முதன் மந்திரி இராமகிருஷ்ண ராவ், மாநில சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

மாநில சர்க்கார் ரூ. 395·73 கோடி பெறுமான திட்டம் தயாரித்திருந்தனர்; ஆனால் திட்டக் குழுவினரோ ரூ. 154·77 கோடி பெறுமான திட்டத்திற்கே தற்காலிக அனுமதி தரமுடியும் என்று கூறியிருக்கின்றனர்.

"இவை மாறுதலுக்கு உரிய திட்டங்கள் என்பதாலும், இவற்றை மாற்றவும்-திருத்தவும் இன்னும் வாய்ப்பும், வசதியும் இருப்பதாலும், திட்டங்கள் இறுதி உருவம் இன்னும் பெறவில்லை என்பதாலும் இவை பற்றி இப்போது சட்டசபை விவாதிக்க வேண்டாம்," என்று முதன் மந்திரி தெரிவித்திருக்கிறாராம்.

# இரண்டு இலட்சம் பேருக்கு வேலை தரும் இரயில்வேயின் 2-ம் திட்டம்

## பிரயாணிகள் வசதி அபிவிருத்திக்கு ரூ. 15 கோடிதானும்!

புதுடில்லி, செப். 21—

இரயில்வே அபிவிருத்திக்கான இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் ரூ. 1,480 கோடி மதிப்புடையது என்றும், அதில் பிரயாணிகளுக்கு வசதி செய்ய ரூ 15 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரியவருகிறது.

'இரயில்வே தயாரித்துள்ள திட்டத்தை திட்டக் குழு வெட்டுமானால், அடுத்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், போக்குவரத்துச் சிக்கல் மிகவும் பாதிக்கப்படும்' என்று இரயில்வே 'போர்டு' அஞ்சுகிறதாம்.

திட்டம் அப்படியே நிறைவேற்றப்படுமானால் இயக்கத்திறன் 10 சதவிகிதம் உயரக்கூடுமாம்.

திட்டப்படி சுமார் 3000 மைல் நீளமுள்ள புதிய இரயில் பாதைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

இரயில்வே இயந்திரங்கள் ரூ. 460 கோடி; புதிய பாதைகள் ரூ. 200 கோடி; 'மீட்டர் கேஜி'லிருந்து 'பிராட்கேஜ்' பாதை அமைத்தல், புதிய சந்திப்பு நிலையங்கள் அமைத்தல், இரட்டைப் பாதைகள் அமைத்தல்—போன்றவற்றிற்காக ரூ 200 கோடி; மின்சார வசதி செய்ய ரூ. 130 கோடி; பாதைகளைப் புதுப்பிக்க ரூ. 125 கோடி; சாமான்கள் சேகரிப்புக்காக ரூ. 100 கோடி; தொழிற்சாலைகளை விரிவாக்குவதற்கு ரூ. 65 கோடி; பிரயாணிகளுக்கு வசதி செய்து தருவதற்கு ரூ 15 கோடி—என்று திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

இப்போதுள்ள தொழிலாளர் எண்ணிக்கையான 10 இலட்சம், இந்த இரண்டாம் திட்ட முடிவு காலத்தில் 12 இலட்சமாக உயரும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

# 10,000 ஏகர் நிலத்தில் முந்திரி விளைச்சல்

எர்ணாகுளம், செப். 21—

திரு-கொச்சியில், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், சுமார் 10,000 ஏகர் நிலத்தில் முந்திரி பயிரிடத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்தத் தகவலை, முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்தமேனன், தொழிலாளர் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

# அதுவும் அங்கே!

புதுடில்லி, செப். 21—

"பெட்ரோல் கண்டுபிடிப்பு வேலை சம்பந்தமான ஆராய்ச்சிகளை தீவிரப்படுத்த டோரானில், ஒரு எண்ணெய், 'இயற்கை வாயு' ஆராய்ச்சிப் பகுதி ஏற்படுத்தப்படுகிறது," என்று ராஜ்யங்கள் சபையில் கேள்வி நேரத்தின்போது தெரிவிக்கப்பட்டது.

## பள்ளிப் பண்ணைகளுக்கு நிலதானம்

### 8,660 ஏகர் கிடைத்தது

சென்னை, செப். 21—

இன்று நடைபெற்ற சென்னை சட்டசபையின் கேள்வி நேரத்தின்போது, அமைச்சர் மாணிக்கவேலர் 'சென்னை மாநிலத்தில் பள்ளிகளின் பண்ணைகளுக்காக இதுவரையில் மொத்தம் 8,660 ஏகர் நிலம் கிடைத்துள்ளது,' என்று குறிப்பிட்டார்.

# 'உபவரி' மூலம்

## ரூ. $7\frac{3}{4}$ இலட்சம் கிடைக்கும்

சென்னை, செப். 21—

"சென்னை நிலவரி சட்டத்தின்படி 5,092 பட்டாதாரர்கள் 'உபவரி' செலுத்த வேண்டும்; இதன் மூலம் வருடத்திற்கு ரூ. 7,73,922 வருமானம் கிடைக்குமென்று மதிப்பிடப்படுகிறது," என்று, ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், சென்னை சட்டசபையில் நிலவரி அமைச்சர் பதிலளித்தார்.

"இச்சட்டத்தின்கீழ் இதுவரை 1,158 பேர்கள் மீது 'உபவரி' விதிக்கப்பட்டுள்ளது," என்றும் குறிப்பிட்டார்.

## 'பணத்தைப் பரவலாக வினியோகியுங்கள்'

### நிதிஅமைச்சர்தேஷ்முக்கூறுகிறார்

புதுடில்லி, செப். 22—

ஏற்கனவே மேற்கொண்டிராத தொழில்களை, கம்பெனிகள், புதிதாக ஆரம்பித்து நடத்துவதுபற்றி சர்க்காருக்கு ஆட்சேபனை இடையாது; எல்லாப் பணத்தையும் ஒரே தொழிலில் முடக்குவதைவிட அப்பணங்களைப் பரவலாக வினியோகிப்பது நல்லதுதான்" என்று, நிதி மந்திரி தேஷ்முக், ராஜ்யங்கள் சபையில் கூறினார்.

## 'பயமுறுத்தலு'க்கு தலைவர் பணிவு?

எதிர்க்கட்சியினர் வெளியேற்றம்

கராச்சி, செப். 22—

மேற்குப் பாகிஸ்தானை ஒரே உறுப்பாக இணைக்கும் மசோதாவில், மாகாணங்களை ஒன்று சேர்ப்பதற்குக் கவர்னர்-ஜெனரலுக்கு அதிகாரம் அளிக்கும் 2-வது பிரிவு, பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில் நிறைவேறியுள்ளது. இதன் மீது 'ஓட்' எடுக்குமாறு நான்கு முறை எதிர்க்கட்சியினர் கோரியுள்ளனர்; என்றாலும் அத்தனை முறையும் அவர்களுக்குத் தோல்விதான் ஏற்பட்டது.

ஒருறுப்புத் திட்டத்தின் கீழ் கவர்னர்-ஜெனரலுக்கு இவ்வளவு அதிகாரம் கொடுப்பதை ஆட்சேபித்து, எதிர்க்கட்சியினர் வெளியேறியுள்ளனர்.

இதற்கு முன்னால் நடைபெற்ற கூட்டத்தில், கிழக்கு வங்கத்தைச் சேர்ந்த உறுப்பினரொருவர், தனது தாய்மொழியாகிய வங்காளியில் பேசினார்.

துணை சபாநாயகர் கிப்பன் (ஆங்கிலோ இந்தியர்), இந்த மொழி தனக்குப் புரியவில்லையென்றும், வங்காளியில் உறுப்பினர் பேசுவதைத் தான் அனுமதிக்க முடியாதென்றும் ஆட்சேபித்தார்; உடனே சபையில் காரசாரமான விவாதங்கள் கிளம்பிவிட்டன.

"துணைசபாநாயகர்தன்னுடைய ஆட்சேபணையை மாற்றிக்கொள்ளாவிட்டால், பெரும்பாலான உறுப்பினர்கள் சபையை விட்டு வெளியேற நேரிடும்," என்று, உள்நாட்டு மந்திரி பஸ்லுல் ஹக் கூறினார்.

உடனே துணைச் சபாநாயகர், உறுப்பினர் வங்காளியில் பேசுவதை அனுமதித்தார்.

## விபத்துக்களில் பம்பாய்க்கு முதல் இடம்!

வேறு எல்லா மாநிலங்களையும் விட பம்பாய் மாநிலத்தில்தான் 1954-ம் ஆண்டில் 5,745 மோட்டார் விபத்துக்கள் ஏற்பட்டன; சுமார் 268 பேர் கொல்லப்பட்டனர்.

சென்னை இரண்டாவது இடம் பெறுகிறது — 4,257 விபத்துக்களில் 245 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

மேற்கு வங்கத்தில் எவ்வளவு என்பது தெரியவில்லை.

ஆந்திராவில் 577 விபத்துக்கள் —164 பேர் பலி;

மைசூரில் 1,109 விபத்துக்கள் —112 பேர் பலி;

ஐதராபாத்தில் 666 விபத்துக்கள்—171 பேர் பலி;

திரு—கொச்சியில் 605 விபத்துக்கள்—94 பேர் பலி;

கூர்ஜரத்தில் 24 விபத்துக்கள் —8 பேர் பலி.

இந்த விபரங்கள் மக்கள் சபையில் தரப்பட்டன.

## எழுபது ரூபாய்க்கு விற்கப்பட்ட குழந்தை

லக்னோ, செப். 22—

நோய்வாய்ப்பட்ட ஏழைத்தாய் ஒருவர், தனது 45 நாள் குழந்தையை பணக்காரப் பெண்மணி ஒருவருக்கு ரூ. 70-க்கு விற்பனை செய்ததாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

தான் வாழ்வதற்கு அந்தத் தாய்க்கு குழந்தையை விற்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லையாம்!

இந்தக் குழந்தை விற்பனை பற்றிக் கேள்வியுற்ற போலீசார் குழந்தையையும், அதனை வாங்கிக் கொண்டவரையும், குழந்தையின் தாயிடம் கொண்டுவந்து நிறுத்தினராம்.

தாயோ, அது தன் குழந்தை தான் என்றும், தான் அதை விற்பனை செய்தது உண்மைதான் என்றும் கூறினாராம்.

போலீசார் பதிலைக் கேட்டு விட்டு சென்று விட்டனராம் குழந்தையை வாங்கிக்கொண்ட அம்மையாரும் குழந்தையுடன் சென்றுவிட்டாராம்.

## சர்க்கார் பஸ்களில் இந்தியில் பெயர்?

மத்திய ஆட்சியிடமிருந்து 'உத்தரவு வந்துள்ளதா'?

சென்னை சட்டசபையில் கேள்வி: மந்திரியின் மறுப்பு

சென்னை, செப். 22—

"சென்னை சர்க்கார் பஸ்களில், அவைகள் புறப்படும் இடங்களும், போய்ச் சேரும் இடங்களும் ஆங்கில மொழியில்தான் எழுதப்படுகின்றன; இந்தப் பெயர்ப் பலகைகளை தமிழில் எழுதும் நோக்கம் இப்பொழுது சர்க்காருக்கு இல்லை"

என்று, அமைச்சர் பரமேசுவரன், சட்ட சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார். இதைத் தொடர்ந்து கேள்விகள் பல எழுந்தன.

கே:- 'ஆங்கிலத்தில் உள்ள பெயர்களை அழித்துவிட்டு, தமிழிலேயே அந்த இடத்தின் பெயர்கள் எழுதப்படுமோ'?

ப:- 'ஆக்கவேலையில் கவனம் செலுத்தவேண்டுமே தவிர, அழிவு வேலையில் ஈடுபடக் கூடாது'

கே:- 'பஸ்களில் உள்ள பெயர்ப் பலகைகளை இனி இந்தியிலேயே பெயர்களை எழுதவேண்டுமென்று மத்திய ஆட்சியிடமிருந்து உத்தரவு எதுவும் வரவில்லையா'?

ப:- 'சும்மா இருக்கும் சங்கை ஊதிக்கெடுக்கவேண்டாம்.'

## பிரிவினை முழக்கம்

★

திருவில்லிபுத்தூர்

25—9—55 மாலை 6 மணிக்கு

பேசுபவர்:

என். வி. நடராசன்

★

வடுகபட்டு

25—9—55 மாலை 5 மணிக்கு அண்ணா திடலில், தோழர் என் எஸ் தம்பையா தலைமையில் நடைபெறும் தோழர்கள் வி. கே. ஜீவிந்தன், முகிலன், கோ. மாதவன், இரெ. சனார்த்தனம், சிந்தனைச் சிற்பி ஆகியோர் பேசுவர்.

## வ. ஆ. மாவட்ட கிளைக் கழக செயலாளர்கட்கு

"வ. ஆ. மாவட்டத்தின் மாநில மாநாட்டு நிதிக் கோட்டாவாகிய ரூ. 2,000-த்தையும் இம்மாத இறுதிக்குள் நாம் பூர்த்தி செய்யவேண்டிய அவசியத்திலிருப்பதால், கிளைக் கழகச் செயலாளர்கள் உடனடியாக நிதி வசூலில் ஊக்கம் செலுத்தி, கிளைக் கழகத்தின் பங்குத் தொகையை எனக்கு அனுப்பி, நிதி வசூலை பூர்த்திசெய்ய வேண்டுகிறேன்" என்று, வ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் முல்லை சத்தி அறிவிக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## திராவிட நாடு பிரிவினை வாரம்

25—9—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு

சென்னை-அண்ணா பிள்ளைத் தெருவில்

(கொத்தவால்சாவடி அருகில்)

### மாபெரும் பொதுக்கூட்டம்

தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில்

தோழர்கள் இளம்பரிதி, டி. சண்முகம் எம்.எல்.ஏ.,

### அண்ணாதுரை

ஆகியோர் பேசுவர்

—சென்னை 14-வது வட்ட தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## அப்துல் கபார்கான் விடுதலை பெறலாம்!

'பலுசிஸ்தானில் நுழையக் கூடாது,' என்று தனக்கு விதிக்கப்பட்ட தடையை மீறி நுழைந்ததற்காகச் சிறைபிடிக்கப்பட்டுள்ள செஞ்சட்டைத் தலைவர் கான் அப்துல் கபார்கான், சீக்கிரமே விடுதலை செய்யப்படலாம் என்று பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை வட்டாரங்கள் கருதுகின்றன.

பாக். மந்திரி சபை, எல்லைத் தலைவர் சிறை வைக்கப்பட்டிருப்பது குறித்து விவாதித்ததாகத் தெரிகிறது. மந்திரி சபையின் முடிவு என்ன என்று தெரியாவிடினும், கபார்கான் விடுதலை செய்யப்படலாம் என்றே அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

### திருக்குறள் வகுப்பு

24—9—55 பிற்பகல் 2-45 மணிக்கு, சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை, எண் 15, முத்துக்கிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில் நடைபெறும். 'தெரிந்து செயல்வகை' எனும் பொருள் குறித்து, திரு. மயிலை வேமுத்து, திருமதி தாமரைக்கண்ணி ஆகியோர் பேசுவர்.

### சொற் பயிற்சிக் கூட்டம்

24—9—55 மாலை 6 மணிக்கு, பெங்களூர்-பிளாக்பள்ளி தி. மு. கழகப் பணிமனையில், தோழர் ஏ. டி. பிரான்சிஸ் தலைமையில், 'விடுதலை ஏன்?' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

• • •

25—9—55 காலை 9 மணிக்கு, சென்னை 31-வது வட்ட அழகிரி மன்ற பணிமனையில் 'திராவிடத்தின் பிரிவு நான்' என்ற பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

### திண்டுக்கல் நகர தி.மு.கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

25—9—55 காலை 9½ மணிக்கு திண்டுக்கல் நகர தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, திராவிட நாடு பிரிவினை வார கூட்ட வரவு-செலவு பற்றியும், இதர முக்கிய பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்படும்.

### விருத்தாசலம் தி. மு. கழக வட்டக்குழு உறுப்பினர்கட்கு

25—9—55 மாலை 2 மணிக்கு, பெண்ணாடம் மன்னார் ரைஸ் மில்லில், விருத்தாசலம் தி. மு. கழக வட்டக் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, வட்டக் கழக துவக்க விழா வரவு-செலவு, பிரச்சாரக் குழு அமைத்தல், மாவட்டக் கழகத்தோடு ஒத்துழைத்தல், வட்டக் கழக சந்தாவும்-மாநில மாநாட்டு நிதியும் ஆகிய பொருட்கள் பற்றி ஆராயப்படும்

### பிளாக்பள்ளி தி. மு. கழக பொதுக்குழு உறுப்பினர்கட்கு

25—9—55 காலை 10 மணிக்கு. பெங்களூர்-பிளாக்பள்ளி தி மு கழக பொது உறுப்பினர் கூட்டம். தோழர் ஏ. டி. பிரான்சிஸ் தலைமையில் சாந்தி சவுக் ரோடு, மிட்லண்ட் கார்ப்பரேஷன் கிழமனையில் நடைபெறும். அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் தீர்மானிக்கப்படும்.

### திருவள்ளுவர் மன்றம்

25—9—55 காலை 9 மணிக்கு, திருச்சி, சின்ன செட்டித் தெரு, 'திருமண மாளிகை'யில், மேற்படி மன்றத்தின் முதலாண்டு நிறைவு விழா திரு. மா.இராசமாணிக்கனார் தலைமையில் நடைபெறும். பிரமுகர்கள் பலர் பேசுவர்.


இப்பொழுது நடைபெறுகிறது

டி. ஆர். ஆர். புரொடக்‌ஷன்ஸ்

# கோமதியின் காதலன்



சென்னை

பாரகன் • பிராட்வே

ராக்ஸி • நூர்ஜஹான்

பெங்களூர்....சிவாஜி • சூபர் • ஸ்ரீ

மதுரை....................தங்கம்

கோயமுத்தூர்........கர்னாடிக்

திருச்சி....................ராஜா

| | | |
|---|---|---|
| சேலம் | ... | பாலஸ் |
| தஞ்சாவூர் | ... | ஞானம் |
| கும்பகோணம் | ... | டயமண்ட் |
| கரூர் | ... | டாக்கீ டாக் |
| ஈரோடு | ... | சென்ட்ரல் |
| திருநெல்வேலி | ... | பாப்புலர் |
| வேலூர் | ... | நேஷனல் |
| கடலூர் | ... | பாடலி |
| பாண்டிச்சேரி | ... | ரத்னா |
| காஞ்சீபுரம் | ... | கண்ணன் |
| தூத்துக்குடி | ... | காரனேஷன் |
| திண்டுக்கல் | ... | சென்ட்ரல் |
| விருதுநகர் | ... | சென்ட்ரல் |
| திருவனந்தபுரம் | ... | சென்ட்ரல் |
| நாகர்கோவில் | ... | கிருஷ்ணா |
| கொல்லம் | ... | எஸ்.எம்.பி.பாலஸ் |
| கோட்டயம் | ... | ராஜ்மகால் |
| மைசூர் | ... | ஆபரா |
| சிதம்பரம் | ... | வடுகநாதன் |
| காரைக்குடி | ... | ராமவிலாஸ் |

★

இத்துடன் அம்பிகாபதி இசைநாடகம்

சாவித்திரி • ராகினி நடிப்பது

தில்லானா நடனம்

...சாயி சுப்புலக்ஷ்மி...


★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று. (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர். இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.